கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

71—

வட்டம்

***1725—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியைத் தனி வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியைத் தனி வட்டமாக அறிவிப்பது குறித்து, மாண்புமிகு அம்மாவினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கம் கண்ட தமிழ் மண்ணில், ஸ்ரீரங்கம் கண்ட தமிழ்த் தாயே, உலக வரலாற்றில் ஒப்பிலாத் தலைவியான, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தனிப் பெரும் சக்தியான (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி 32 கிராம ஊராட்சிகளையும், 5 பேரூராட்சிகளையும் மற்றும் பர்கூர் மலைக் கிராமத்தையும் உள்ளடக்கிய தொகுதியாகும். சுமார் 1 இலட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்கள் இந்தத் தொகுதியிலே இருக்கின்றனர். எனது தொகுதியில் உள்ள மக்கள் சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு

2011 ஆகஸ்ட் 30]

பிரச்சினைகளுக்கு தாலுகா அலுவலகம் செல்ல வேண்டுமானால், பவானி வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதில் குட்டையூர், வேளாம்பட்டி மற்றும் பல ஊர்கள் கர்நாடக எல்லைப் பகுதியில் அமைந்துள்ளன. தற்பொழுதுள்ள வட்டாட்சியர் அலுவலகம் 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால், பொதுமக்கள் தங்கள் தேவைகளுக்கு ஒரு நாளைக்கு முன்பாகவே செல்ல வேண்டிய ஒரு நிலைமையுள்ளது. இதனால், தொகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுமக்களின் நலன் கருதி அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்துத் தரவேண்டுமாய் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, ஒரு வட்டம் அமைக்க வேண்டும் என்று சொன்னால், குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டர் முதல் 500 சதுர கிலோ மீட்டர் வரை இருக்க வேண்டும். 30 வருவாய்க் கிராமங்கள் இருக்க வேண்டும். 2 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்க வேண்டும். ஆனால், அங்கே 28 வருவாய்க் கிராமங்கள்தான் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவினுடைய பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இதில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம் என்பது 2,650 சதுர கிலோ மீட்டர் கொண்ட 78 ஊராட்சிகளைக் கொண்ட, 2 பேரூராட்சிகளைக் கொண்ட பெரிய வட்டமாகும். கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 2002 ஆம் ஆண்டு அதைத் தனி வட்டமாகப் பிரிப்பதற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆகவே, ராயக்கோட்டையை மையமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2011 ஆகஸ்ட் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல, தேவையான அளவிற்கு வருவாய்க் கிராமங்கள், மக்கள் தொகை, சதுர கிலோ மீட்டர் பரப்பு என எல்லாமே இருக்கிறது என்று சொல்லுகின்றார்கள். இது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மறு சீரமைப்பிலே எனது ஆரணி தொகுதியிலே செய்யாறு வட்டத்திலிருந்து 14 பஞ்சாயத்துகள் ஆரணி தொகுதியிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த 14 பஞ்சாயத்துகளிலும் இருக்கக்கூடிய பொதுமக்களுக்கும் 6 கிலோ மீட்டர் ஆரணிக்கு வந்து, அங்கிருந்து 30 கிலோ மீட்டர் திரும்பவும் செய்யாறுக்குச் செல்லக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. எனவே, தொகுதி மறு சீரமைப்பிலே இணைக்கப்பட்ட 14 பஞ்சாயத்துகளையும் ஆரணி வட்டத்திலே இணைத்து, நீதிமன்ற எல்லையையும் விரிவாக்க முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 14 ஊராட்சிகள் என்று சொல்லுகின்றார். அதிலிருந்து இந்தப் பக்கம் சேர்க்கின்றபோது, ஏற்கெனவே இருக்கின்ற வட்டத்தில் அந்த வருவாய்க் கிராமங்கள் குறையுமானால், அங்கேயிருக்கின்ற மக்களும், அதனுடைய* norms*–க்கும் உட்பட்டு வராத காரணத்தினால் அதைப் பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுபோய் முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பாதம் பணிந்த பணிவான வணக்கங்களை அன்போடு தெரிவித்து, வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளியைத் தனித் தாலுகாவாக அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உண்டா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு வட்டம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டரிலிருந்து 500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மற்றும் ஒரு இலட்சம் மக்கள் தொகையிலேயிருந்து 5½ இலட்சம் மக்கள் தொகை, 30 வருவாய்க் கிராமங்கள் ஆகியவை இருக்கவேண்டும். இவையெல்லாம் இருப்பின், நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு முடிவு செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பேருந்து வசதி

***1757—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—